# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 132/2014 | Date :21.09.2022. | DW1 |
|---|---|---|
| Name: கோசலை | W/o. மாரியப்பன் | |
| Evidence Recorded Time: 1.49 P.M. to 02.04 P.M | | |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்ன பதில் போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. தாண்டவன், அமராவதியின் ஆகியோர்களின் மகன்தான் வெங்கடாஜலம் என்றால் சரிதான். வெங்கடாஜலம் இறந்துவிட்டார். வெங்கடாஜலத்தின் வாரிசுகள்தான் நாகம்மாள், சசிக்குமார், சிவக்குமார், கவிதா என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்தார்கள் என்ற அப்பு தாக்கல் செய்துள்ளார்கள். வாதி என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால் பாகப்பிரிவினை கேட்டு போட்டுள்ளார். இந்த வழக்கின் இரண்டாவது சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.546/6 ஆகும். நான் என் அம்மாவை ஏமாற்றிதான் உயில் எழுதி வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. நாகம்மாள், சசிக்குமார், சிவக்குமார் ஆகியோர்கள் மீது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.219/2013 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் அழைப்பாணை அவர்களுக்க கிடைத்த பிறகுதான் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு நான் சொன்ன உயில் பற்றி தெரியவந்தது என்றால் அதற்கு முன்பு 2002–லேயே தெரியும். நான் எழுதிய வாங்கிய உயிலில் உள்ள சொத்தின் சர்வே எண்.452/16 புதிய சர்வே எண்.544/10 பு.ஏக்.1.38 என்று எழுதியுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை விற்றுவிட்டார்கள். நான் விற்பனை செய்த சொத்தின் சர்வே எண்.452/7, புதிய சர்வே எண்.546/6 ஒரு ஏக்கரை விற்பனை செய்துள்ளேன் என்றால் 98 செண்ட் நிலத்தை விற்பனை செய்துள்ளேன். இந்த வழக்கில் இரண்டாவது அயிட்ட சொத்து மாதுவிற்கு பாத்தியப்பட்ட சொத்தா என்றால் இல்லை. மாது இறந்துவிட்டார். அவர் இறப்பிற்கு பிறகுதான் அமராவதி பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. மாது இறப்பதற்கு முன்பு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரும் அவருடைய வாரிசுகள் அமராவதி, நடேசன், வெங்கடாஜலம், அப்பு ஆகியோர்கள் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் அவ்வாறு இல்லை. அமராவதி 01.09.2002–ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அமராவதி இறந்துபின்னிட்டு எனது சகோதரர்களுடன் சேர்ந்து நானும் கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் நானும், எனது அக்கா, எனது அம்மா ஆகியோர்கள் மட்டுமே கூட்டாக அனுபவித்து வந்தோம். இந்த சொத்துக்கள் அனைத்தும் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்து என்றால்

இல்லை. அமராவதிக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். எனது அப்பா, அம்மா பெயரில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் அவர்களுடைய வாரிசுகளான எங்கள் அனைவருக்கும் சமபங்கு உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. என் அண்ணன் வெங்கடாஜலத்திற்கு சேரவேண்டிய சொத்தை அவருடைய வாரிசுகளான நாகம்மாள், கவிதா, சசிக்குமார், சிவக்குமார் ஆகியோர்களுக்கு பிரித்துக்கொடுக்க ஆட்சேபனை இல்லை என்றால் வெங்கடாஜலத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பிரித்துக்கொடுக்க எனக்கு ஆட்சேபனை இல்லை. என் அப்பா சொத்து எனக்கு வேண்டும்.

(வாத வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/—DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.